# கூட்டுறவு

மலர் : 96 ✦ ஜூலை : 2023 ✦ இதழ் : 4

**கூட்டுறவு இயக்கக் கொள்கை விளக்க இதழ்**

**எல்லார்க்கும் எல்லாமே என்றே ஞாலம்**
**இலங்கிடவே கூட்டுறவு ஏற்ற பாதை**
**இல்லாமை இல்லாத வாழ்வு வேண்டின்**
**ஏற்றிடுவோம் கூட்டுறவு வெற்றிப் பாதை**

ஆசிரியர்:

**கோ.க.மாதவன்,** எம்.ஏ., பி.எட்., எச்.டி.சி.எம்.,

தொலைபேசி : 2836 4865 & 66
ஃபேக்ஸ் : 2836 4035

மின்னஞ்சல் : tncu08@gmail.com

இணையதளம்: www.tncu.tn.gov.in

**ஆயுள் சந்தா ரூ. 2000**
**(பத்தாண்டுகளுக்கு)**
**ஆண்டு சந்தா ரூ.210**
**தனிப்பிரதி விலை ரூ.20**

## விளம்பரக் கட்டணம்

பல வண்ணம் (ஓராண்டிற்கு)

| | | |
|---|---|---|
| **அட்டை 4 ஆம் பக்கம்** | **ரூ.** | **50,000** |
| **அட்டை 2 & 3ஆம் பக்கம்** | **ரூ.** | **40,000** |

உள்ளே கருப்பு–வெள்ளை (ஓராண்டிற்கு)

| | | |
|---|---|---|
| **முழுப்பக்கம்** | **ரூ.** | **24,000** |
| **அரைப்பக்கம்** | **ரூ.** | **12,000** |

உள்ளே கருப்பு–வெள்ளை (6 மாதங்களுக்கு)

| | | |
|---|---|---|
| **முழுப்பக்கம்** | **ரூ.** | **12,000** |
| **அரைப்பக்கம்** | **ரூ.** | **6,000** |

## இந்த இதழில்...

05 ✦ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் நான்கு புதிய கிளைகளை காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார்

07 ✦ மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கூட்டுறவு நிறுவனங்களின் தயாரிப்புகளை சந்தைப்படுத்திட பொதுவான கூட்டுறவுச் சந்தை (COOP BAZAAR) கைபேசி செயலி துவக்கி வைத்தார்

09 ✦ மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள், திருபுவனம் தேர்வுநிலை பேரூராட்சி பகுதியில், முடிவுற்ற திட்டப் பணிகளை துவக்கி வைத்தும் மற்றும் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 211 பயனாளிகளுக்கு 1.01 கோடி மதிப்பீட்டில் அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்

11 ✦ மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் சென்னை, திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கத்தின் தேனாம்பேட்டையில் செயல்பட்டுவரும் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடையினை ஆய்வு செய்தார்

15 ✦ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் தக்காளி விலை ஏற்றத்தை கட்டுப்படுத்த கூட்டுறவுத்துறை நியாயவிலைக் கடைகள் மூலம் தக்காளி விற்பனை பற்றி துறை அலுவலர்களுடன் ஆய்வு

17 ✦ மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின், குன்றத்தூர் கிளையில் வங்கி செயல்பாடுகளை தொடங்கி வைத்து கடனுதவிகளை வழங்கினார்

23 ✦ திருவள்ளூர் மண்டலத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மரு. ந.சுப்பையன், இ.ஆ.ப., ஆய்வு

35 ✦ பெண்களின் சமூக பொருளாதார முன்னேற்ற வளர்ச்சியில் பொத்தேரி கிராம இணை உணவு தயாரிப்போர் மகளிர் மேம்பாட்டு தொழிற் கூட்டுறவு சங்கம்

41 ✦ நிர்வாக நுணுக்கங்கள்!

# திருச்சிராப்பள்ளி
# மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிட்.,

## 01.01.2020 முதல் புதிய வட்டி விகிதம்

| வட்டி விகிதம் | பொது மக்கள் | மூத்த குடிமக்கள் |
| --- | --- | --- |
| 15 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை | 4.10% | 4.10% |
| 46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை | 4.25% | 4.25% |
| 91 நாட்கள் முதல் 180 நாட்கள் வரை | 6.00% | 6.00% |
| 181 நாட்கள் முதல் 364 நாட்கள் வரை | 6.50% | 6.75% |
| ஓராண்டும் அதற்கு மேலும் | 7.00% | 7.25% |

*சேமிப்பிற்கு சிறந்த வங்கி!* *சேவைக்கு உகந்த வங்கி !*

**விபரங்களுக்கு:**

தலைமையிடம் மற்றும் திருச்சி, கரூர், பெரம்பலூர், அரியலூர் மாவட்டக் கிளைகளை அணுகவும்.

**தொடர்புக்கு: 0431 2702441, 442, 443**


## அட்டைப்பட விளக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 11.7.2023 அன்று தலைமைச் செயலகத்தில், கூட்டுறவுத்துறை சார்பில் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் தாம்பரம் கிழக்கு, தாம்பரம் மேற்கு, குன்றத்தூர் மற்றும் அம்பத்தூர் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள நான்கு புதிய வங்கிக் கிளைகளை காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள், தலைமைச் செயலாளர் திரு. சிவ்தாஸ் மீனா, இ.ஆ.ப., கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைச் செயலாளர் முனைவர் டி.ஜகந்நாதன், இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மருத்துவர் ந.சுப்பையன், இ.ஆ.ப., தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குநர் திரு. ம.அந்தோணிசாமி ஜான் பீட்டர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் நான்கு புதிய கிளைகளை காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார்



**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 11.7.2023 அன்று தலைமைச் செயலகத்தில், கூட்டுறவுத்துறை சார்பில் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் தாம்பரம் கிழக்கு, தாம்பரம் மேற்கு, குன்றத்தூர் மற்றும் அம்பத்தூர் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள நான்கு புதிய வங்கிக் கிளைகளை காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார்.

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி 1905–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 118 ஆண்டுகளைக் கடந்து சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. அகில இந்திய அளவில், செயல்படும் அனைத்து தலைமைக் கூட்டுறவு வங்கிகளில், தொடங்கியது முதல் தொடர்ந்து இலாபத்தில் இயங்கி வரும் ஒரே வங்கி தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி ஆகும். சென்னையில் சுமார் 5 இலட்சம் வாடிக்கையாளர்களுக்கு வங்கிச்

சேவைகளை அளித்து வரும் இவ்வங்கி தற்போது 47 கிளைகளுடன் செயல்பட்டு வருகிறது.

இவ்வங்கி, 2022–23ம் நிதியாண்டில், 31,484 கோடி ரூபாய் அளவிற்கு வர்த்தகம் மேற்கொண்டு 114.78 கோடி ரூபாய் நிகர இலாபமாக ஈட்டியுள்ளது. இவ்வங்கியின் முதலீடுகள் ரூ. 4,615 கோடியாகவும், வாடிக்கையாளர்களின் வைப்பீடுகள் ரூ. 12,486 கோடியாகவும் உள்ளது. இவ்வங்கியில் தமிழ்நாடு அரசின் பங்கு மூலதனம் 20.26 கோடி ரூபாய் ஆகும். வணிக வங்கிகளுக்கு நிகராக, வங்கியின் அனைத்துச் சேவைகளும் கணினி வழியில் மட்டுமே நடைபெறுகிறது. மேலும், துரிதப் பணப்பரிமாற்றச் சேவைகளான RTGS, NEFT, IMPS, UPI இணைய வழி வங்கிச் சேவை, கைபேசி வழிச் சேவை, தானியங்கி பணப்பட்டுவாடா இயந்திரங்கள் என அனைத்து கணினிவழி வசதிகளையும் இவ்வங்கி கொண்டுள்ளது.

சென்னை மாநகராட்சியின் எல்லைகள் விரிவடைந்ததைத் தொடர்ந்து, விரிவாக்கம் செய்யப் படாமலிருந்த இவ்வங்கியின் கிளைகள், கூட்டுறவுத் துறையின் 2023–2024ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பிற்கிணங்க, இந்திய ரிசர்வ் வங்கியின் உரிமம் பெற்று தாம்பரம் கிழக்கு, தாம்பரம் மேற்கு, குன்றத்தூர் மற்றும் அம்பத்தூர் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள நான்கு புதிய வங்கிக் கிளைகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 11.7.2023 அன்று திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கேஆர்.பெரியகருப்பன் அவர்கள், தலைமைச் செயலாளர் திரு. சிவ்தாஸ் மீனா, இ.ஆ.ப., கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைச் செயலாளர் முனைவர் டி.ஜகந்நாதன், இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மருத்துவர் ந.சுப்பையன், இ.ஆ.ப., தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குநர் திரு. ம.அந்தோணிசாமி ஜான் பீட்டர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். ◆



**"விவேகம்" என்னும் வெள்ளி முளைத்து "சாதி மதப்பித்து" என்னும் சனி தொலைந்தால்தான் "சமத்துவம்" என்னும் ஞாயிறு பிறக்கும்"**

**– முத்தமிழறிஞர் கலைஞர்**

# மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் கூட்டுறவு நிறுவனங்களின் தயாரிப்புகளை சந்தைப்படுத்திட பொதுவான கூட்டுறவுச் சந்தை (COOP BAZAAR) கைபேசி செயலி துவக்கி வைத்தார்.




**மா**ண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் கூட்டுறவு நிறுவனங்களின் தயாரிப்புகளை சந்தைப்படுதவதற்கு 'கோப் பஜார்' (COOP BAZAAR) கைபேசி செயலியை மக்களின் பயன்பாட்டிற்காக 6.7.2023 அன்று தலைமைச் செயலகத்தில் துவக்கி வைத்தார்.

இந்த செயலி வாயிலாக, திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம், ஈரோடு, பெருந்துறை, சைதாப்பேட்டை கூட்டுறவுச் சங்கங்கள், திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கம், காஞ்சிபுரம் பண்டகசாலை, கொல்லிமலை மற்றும் சத்தியமங்கலம் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் மளிகை, தேன், மஞ்சள் தூள், மிளகாய் தூள் உட்பட, 44 பொருட்களை பொதுமக்கள் பெறமுடியும். இதுதவிர, கூட்டுறவு விற்பனை இணையத்தின் உரங்கள், நுண்ணூட்டச் சத்து, நீரில் கரையும் உரங்கள் உட்பட, 20 பொருட்கள் என மொத்தம், 64 பொருட்களுக்கும் ஆர்டர் கொடுக்கலாம்.

இது குறித்து, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கூறியதாவது :

கூட்டுறவுச் சங்கங்களின் பொருட்கள் தரமாக இருப்பதுடன் விலையும் குறைவாக உள்ளன. தற்போது அவை அங்காடிகளில் விற்கப்படுகின்றது. அவற்றை அங்காடிக்கு வந்து தான் வாங்க வேண்டும் என்ற நிலையை மாற்றி, வீடு, அலுவலகத்தில் பெறுவதற்கு, செயலி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. முதல் கட்டமாக எட்டு சங்கங்களில், 64 வகை பொருட்கள், செயலி வாயிலாக ஆர்டர் கொடுத்தால், வீடுகளுக்கு உடனே வழங்கப்படும். இவ்வாறு அமைச்சர் அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை செயலாளர் முனைவர் டி.ஜகந்நாதன், இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மருத்துவர் ந.சுப்பையன், இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) திருமதி. விஜயராணி, இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர். ◆

## ஊமத்தை

ஊமத்தை இலைச் சாறுடன் தேங்காய் எண்ணெய் சேர்த்துக் காய்ச்சி காயங்களுக்குத் தடவ ஓரிரு நாளில் புண் ஆறும். படுத்த படுக்கையாயிருக்கும் நோயாளிகளின் மரணத்துக்கு, அவர்கள் நோயைவிட படுக்கையால் வரும் புண்தான் (Bed Sore) மரணத்தைத் தரும். படுக்கைப் புண்ணை ஆற்றுவதிலும் ஊமத்தைக்குப் பங்கு உண்டு.

# மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கேஆர்.பெரியகருப்பன் அவர்கள்,

## திருபுவனம் தேர்வுநிலை பேரூராட்சி பகுதியில், முடிவுற்ற திட்டப் பணிகளை துவக்கி வைத்தும் மற்றும் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 211 பயனாளிகளுக்கு 1.01 கோடி மதிப்பீட்டில் அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.



**மா**ண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள், சிவகங்கை மாவட்டம், திருபுவனம் தேர்வுநிலை பேரூராட்சி பகுதியில் 05.07.2023 அன்று மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ப.மணிவண்ணன் தலைமையில், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார் முன்னிலையில், முடிவுற்ற திட்டப்பணி யினை துவக்கி வைத்தும் மற்றும் புதிய திட்டப் பணிக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மேலும், சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி திருபுவனம் கிளையில் பொது மக்களுக்கு மிகவும் பயனுள்ள வகையில், புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஏடிஎம் மையமும் 05.07.2023 அன்று பொதுமக்களின் பயன்பாட்டிற்கென திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சிகளின் வாயிலாக சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் சார்பில் 15 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த 183 உறுப்பினர் களுக்கு ரூ.81.10 இலட்சம் மதிப்பீட்டிலான பல்வேறு வகையான கடனுதவிகள், 1 பயனாளிக்கு ரூ.25,000 மதிப்பீட்டில் கைம்பெண் கடன், 1 பயனாளிக்கு ரூ.50,000 மதிப்பீட்டில் மகளிர் தொழில் முனைவோருக்கான கடன், 2 பயனாளி களுக்கு மொத்தம் ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டிலான சிறுவணிகக் கடன், 13 பயனாளிகளுக்கு ரூ.11.51 இலட்சம் மதிப்பீட்டிலான பயிர் கடன், 11 பயனாளி களுக்கு ரூ. 6.16 இலட்சம் மதிப்பீட்டிலான பால் மாடு பராமரிப்புக் கடனுதவி என ஆக மொத்தம் 211 பயனாளிகளுக்கு ரூ.1.01 கோடி மதிப்பீட்டிலான பல்வேறு கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளது. இதுபோன்று பொது மக்களுக்கு பயனுள்ள வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, பிற மாநிலங்களுக்கு முன்மாதிரியான மாநிலமாகத் தமிழகம் சிறந்து விளங்கி வருகிறது என மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் தெரிவித்தார்.

## பூண்டு

பூண்டு ஒரு சத்தான மூலிகை மற்றும் பல நல்ல பலன்களை உள்ளடக்கியது. இது இரத்த கொதிப்பை கட்டுப்படுத்த உதவுகிறது. பூண்டு ரசம் மற்றும் உணவு வகைகளில் பூண்டினை அடிக்கடி சேர்த்து உண்பது சர்க்கரை நோயை கட்டுப்படுத்த உதவும். இது வீக்கம், கொழுப்பு ஆகியவற்றை கரைக்க உதவுகிறது. நீங்கள் இதை தொடர்ந்து உண்ணும் போது உங்களது நீரழிவை நிரந்தரமாக சரி செய்யாவிட்டாலும் வேறு கோளாறுகளை தவிர்க்கலாம்.

இந்நிகழ்ச்சிகளில், சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குநர் திரு.கே.சி.இரவிச் சந்திரன், கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் திருமதி ஜீனு, சிவகங்கை கோட்டாட்சியர் திருமதி கு.சுகிதா, திருபுவனம் பேரூராட்சி தலைவர் திரு.த.சேங்கைமாறன், திருபுவனம் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திரு.பா.சின்னையா, மானாமதுரை நகர் மன்றத்தலைவர் திரு.மாரியப்பன் கென்னடி, செயல் அலுவலர் திரு.ஆர்.ஹச்.ஜெயராஜ் பேரூராட்சி உறுப்பினர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர் ◆

# மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கேஆர்.பெரியகருப்பன் அவர்கள்

## சென்னை, திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கத்தின் தேனாம்பேட்டையில் செயல்பட்டுவரும் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடையினை ஆய்வு செய்தார்



**செ**ன்னை, திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கத்தின் தேனாம் பேட்டையில் செயல்பட்டு வரும் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடையினை மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்கள் 28.6.2023 அன்று ஆய்வு செய்து பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளில் குறைந்த விலையில் தக்காளி கிலோ ஒன்றுக்கு ரூ. 60க்கு விற்பனையைத் தொடங்கி வைத்தார். பின்னர் செய்தியாளர்களுக்கு அவர் தெரிவித்ததாவது :–

தமிழ்நாட்டில் தக்காளி விலை ஏற்றத்தை கட்டுப்படுத்த கூட்டுறவுத் துறையின் மூலம் செயல்பட்டு வரும், பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மற்றும் நகரும் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் கொள்முதல் விலைக்கே தக்காளி விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு கோடையில் கடும் வெப்பம் நிலவியதால் விவசாயிகள் தக்காளி பயிரிடுவது கணிசமாக குறைந்ததாலும், அண்டை மாநிலங்களிலிருந்து தக்காளி வரத்து குறைந்ததாலும், கடந்த வாரம் முதல் தக்காளி விலை அதிகரித்துள்ளது. தோராயமாக நாள் ஒன்றுக்கு சென்னை, கோயம்பேடு மார்கெட்டிற்கு 800 டன் வரையிலான வரக்கூடிய தக்காளி வரத்து தற்போது 300 டன் என்ற அளவில் குறைந்துள்ளது. இதனால் வெளிச்சந்தை களில் ஒரு கிலோ தக்காளியின் விலை ரூ. 90 முதல் ரூ. 100 வரை விற்கப்படுகிறது. இதனால் ஏழை, எளிய மற்றும் நடுத்தர மக்கள் பாதிக்கப் பட்டுள்ளனர்.

இந்த விலையேற்றத்தை கட்டுப்படுத்தும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி கூட்டுறவுத்துறையின் மூலம் தமிழகத்தில் செயல்பட்டு வரும் 62 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் 3 நகரும் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் கொள்முதல் விலைக்கே தக்காளி விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளில் 28.6.2023 முதல் குறைந்த பட்சமாக தக்காளி விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 60க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்த விலையானது வெளிச்சந்தையுடன் ஒப்பிடுகையில் ரூ. 30 முதல் ரூ. 40 வரை குறைவானதாகும்.

திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கத்தின்கீழ் தேனாம்பேட்டை, திருவல்லிக்கேணி, இராயப்பேட்டை, இராஜா அண்ணாமலைபுரம், கீழ்ப்பாக்கம், பெரியார் நகர் ஆகிய இடங்களில் செயல்பட்டுவரும் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளில் தக்காளி கிலோ ஒன்றுக்கு ரூ. 60க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மேலும், அம்மா உணவகத்திற்கும் தனியாக தக்காளி கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப் பட்டுள்ளது.

இந்த தற்காலிகமான தக்காளி விலையேற்றத்தை கட்டுப்படுத்த அரசு



அனைத்து நடவடிக்கைகளையும் துரிதமாக மேற்கொண்டு வருகிறது. மேலும், சட்டவிரோதமாக தக்காளியை பதுக்குவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. இந்த நிலை நீடித்தால் தமிழ்நாட்டில் உள்ள நியாயவிலைக் கடைகள் மூலம் தக்காளி விற்பனையினை விரிவுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே, பொதுமக்கள் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளில் தக்காளியினை வாங்கிப் பயனடையுமாறு மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மரு. ந.சுப்பையன், இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர்கள் திரு. சக்திசரவணன், திருமதி. ந.மிருனாளினி, டி.யூ.சி.எஸ் மேலாண்மை இயக்குநர் திரு. பாபு மற்றும் பலர் உடனிருந்தனர். ◆

# ஆர்.கே.10. விருதுநகர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிட்., விருதுநகர்

# 104/1, மதுரை ரோடு, அஞ்சல் பெட்டி எண் : 8, விருதுநகர்

தொலைபேசி எண்: (04562) 245815

Website : www.vrdccbank.in Email : virudhunagardccb@gmail.com

| வ. எண் | இட்டுவைப்பு காலம் | மூத்த குடிமக்கள் அல்லாத வாடிக்கை யாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்படும் வட்டி விகிதம் | மூத்த குடிமக்களுக்கு நிர்ணயம் செய்யப்படும் வட்டிவிகிதம் |
|---|---|---|---|
| 1. | 7 நாட்கள் முதல் 14 நாட்கள் வரை | 3.50% | 3.50% |
| 2. | 15 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை | 4.00% | 4.00% |
| 3. | 46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை | 4.50% | 4.50% |
| 4. | 91 நாட்கள் முதல் 180 நாட்கள் வரை | 5.00% | 5.00% |
| 5. | 181 நாட்கள் முதல் 364 நாட்கள் வரை | 5.75% | 5.75% |
| 6. | ஒரு வருடம் முதல் 3 வருடங்கள் வரை | 6.25% | 6.75% |
| 7. | 3 வருடத்திற்கு மேல் | 5.75% | 6.25% |

- வைப்புகளுக்கு கூடுதல் வட்டி
- NEFT & RTGS வசதி
- ATM மற்றும் POS வசதி
- Mobile Banking வசதி
- INSTA CARD வசதி
- Micro ATM வசதி
- MSME கடன்
- சம்பளக்கடன்
- குறைந்த வட்டியில் நகைக்கடன்
- தனி நபர் நகைக்காசுக் கடன்
- வீட்டு வசதி மற்றும் வீடு அடமானக்கடன்
- சிறு வணிகக்கடன்
- மாற்றுத்திறனாளிகள் கடன்
- முதலீட்டுக் கடன்கள்
- சுய உதவிக் குழுக்கடன்கள்
- மகளிர் தொழில் முனைவோர் கடன்

S.K. மயில்சாமி
தலைவர்

பா. செந்தில் குமார்
இணைப்பதிவாளர் / மேலாண்மை இயக்குநர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி

## மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்

## திரு. கேஆர்.பெரியகருப்பன் அவர்கள்

### தக்காளி விலை ஏற்றத்தை கட்டுப்படுத்த கூட்டுறவுத்துறை நியாயவிலைக் கடைகள் மூலம் தக்காளி விற்பனை பற்றி துறை அலுவலர்களுடன் ஆய்வு



மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் தலைமையில் 3.7.2023 அன்று தலைமைச் செயலகம், அமைச்சர் அலுவலகத்தில் தக்காளி விலை யேற்றம் தொடர்பாக, கூட்டுறவுத்துறை அலுவலர்கள் மற்றும் தோட்டக்கலைத்துறை அலுவலர் களுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு அரசு தக்காளி விலை ஏற்றத்தை கட்டுப்படுத்த பல்வேறு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த விலையேற்றத்தை கட்டுப்படுத்தும் வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி கூட்டுறவுத்துறையின் மூலம் சென்னையில் செயல்பட்டு வரும் 27 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள், கோயம்புத்தூரில் செயல்பட்டு வரும் 10 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள், திருச்சியில் செயல்பட்டு வரும் 13 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மற்றும் 1 நகரும் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடை, மதுரையில் செயல்பட்டு வரும் 4 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள். மேலும், தூத்துக்குடி, திருவண்ணாமலை, திருநெல்வேலி, தஞ்சாவூர், திருப்பூர், சேலம், ஈரோடு, வேலூர் ஆகிய மாவட்டங்களில் தலா 1 வீதம் செயல்பட்டு வரும் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் என 62 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் 3 நகரும் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் தக்காளி கிலோ ஒன்றிற்கு ரூ. 60 வீதம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தொடர்ந்து, அண்டை மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய தக்காளியின் வரத்து குறைவாக உள்ள காரணத்தினால் வெளிச் சந்தைகளில் தக்காளியின் விலை உயர்வு காணப்படுகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவுப்படி, கூட்டுறவுத்துறை மற்றும் தோட்டக் கலைத்துறை அலுவலர் இணைந்து தமிழ்நாடு மற்றும் அண்டை மாநிலங்களில் தக்காளி பயிர் செய்யப்பட்டுள்ள இடங்களை கண்டறிந்து, அங்கிருந்து தக்காளி கொள்முதல் செய்து இந்த விலை ஏற்றத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த விலை ஏற்றத்தால் ஏழை மற்றும் நடுத்தர மக்கள் பாதிப்படையாமல் தடுக்க, நியாயவிலைக் கடைகளில் தக்காளி விற்பனை செய்ய முடிவு செய்யப் பட்டுள்ளது.

அதன்படி, சென்னையில் முதற்கட்டமாக, வடசென்னையில் 32 நியாயவிலைக் கடைகளிலும், மத்திய, தென்சென்னைகளில் தலா 25 நியாயவிலைக் கடைகளிலும் என மொத்தம் 82 நியாவிலைக் கடைகளில் 4.7.2023 அன்று முதல் தக்காளி கிலோ ரூ. 60க்கு விற்பனை செய்யப்படும்.

மேலும், தேவைக்கேற்ப தமிழ்நாட்டில் உள்ள பிற பகுதிகளிலும் நியாயவிலைக் கடைகள் மூலம் தக்காளி விலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர அரசு முழு முயற்சி மேற்கொண்டு வருகிறது என மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கே.ஆர்.பெரிய கருப்பன் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மரு. ந.சுப்பையன், இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர் திருமதி. விஜயராணி உட்பட கூட்டுறவுத்துறை அலுவலர்கள், தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர். ◆

# மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின், குன்றத்தூர் கிளையில் வங்கி செயல்பாடுகளை தொடங்கி வைத்து கடனுதவிகளை வழங்கினார்



**மா**ண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் 12.7.2023 அன்று தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் குன்றத்தூர் கிளையில், வங்கி செயல்பாடுகளை துவக்கி வைத்து ரூ. 2 கோடியே 13 இலட்சத்து 81 ஆயிரம் மதிப்பிலான கடனுதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், கூட்டுறவுத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது :-

“மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் கூட்டுறவுத்துறையின் சார்பில் 11.7.2023 அன்று தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் தாம்பரம் கிழக்கு,

தாம்பரம் மேற்கு, குன்றத்தூர் மற்றும் அம்பத்தூர் ஆகிய இடங்களில் நான்கு புதிய வங்கிக் கிளையினை காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார்.


அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் குன்றத்தூர் கிளையினை நேரில் பார்வையிட்டு, வங்கி செயல்பாடுகளை துவக்கி வைத்து கடனுதவிகளை வாடிக்கை யாளர்களுக்கு வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

தமிழ்நாடு வங்கி சேவையிலும் கூட்டுறவு அமைப்புகளிலும் சிறப்பான முறையில் செயல்பட்டு, இந்தியாவிலேயே முன்னோடியாக திகழ்கிறது. இந்த வங்கிச் சேவையினை பொதுமக்கள் பயன்படுத்தி "உங்களுக்காக நாங்கள், எங்களுக்காக நீங்கள்" என்ற அடிப்படையில் எங்களை ஊக்கப்படுத்தி அதன் மூலம் நீங்கள் பயன்பெறலாம். 100 ஆண்டுகளுக்கும் மேலாக வங்கி சேவையில் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி செயல்பட்டு வருகிறது. இலாபநோக்கமற்ற முறையில் இந்த வங்கிச் சேவை தொடர்ந்து வருகிறது.

இந்த வங்கிச் சேவையின் மூலம் சிறு, குறு விவசாயிகள், சிறு வணிகர்கள், வியாபாரிகள், பொதுமக்கள், வீட்டுக்கடன், நகைக்கடன், தொழில் தொடங்க கடன், போன்ற கடனுதவிகளை குறைந்த வட்டியில் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வங்கிச் சேவையினை பொதுமக்கள் அதிகமாக பயன்படுத்திக் கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் தமிழ்நாட்டில் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு ரூ. 51 ஆயிரம் கோடியாக இருந்த வைப்புத் தொகை, தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சி அமைத்த பின்பு ரூ. 78 ஆயிரம் கோடியாக வைப்புத் தொகை உயர்ந்துள்ளது. இது பெரும் வளர்ச்சியாகும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, வணிக வங்கிகளுக்கு நிகராக துரிதப் பணப்பரிமாற்றச் சேவைகளான RTGS, NEFT, IMPS, UPI, இணைய வழி வங்கிச் சேவை, தானியங்கி பணப்பட்டுவாடா இயந்திரங்கள் என அனைத்து சேவையினையும் கணினி வழியாக வழங்கி வருகிறது. இதனை பொதுமக்கள் பயன்படுத்தி பயன்பெற கேட்டுக்கொள்கிறேன்". இவ்வாறு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கூறினார்.



அதனைத் தொடர்ந்து, கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் ஒரு நபருக்கு ரூ. 50 இலட்சத்துக்கான வீட்டுக் கடன், 18 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 1 கோடியே 42 இலட்சத்து 56 ஆயிரம் மதிப்பிலான மகளிர் சுய உதவிக்குழு கடன், ஒரு நபருக்கு ரூ. 1 இலட்சம் மதிப்பிலான தனிநபர் கடன், 39 நபர்களுக்கு ரூ. 19.50 இலட்சம் மதிப்பிலான சிறு வணிக கடன், 3 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ. 75 ஆயிரம் மதிப்பிலான மாற்றுத் திறனாளி கடனுதவியினையும் ஆகமொத்தம் 62 நபர்களுக்கு ரூ. 2 கோடியே 13 இலட்சத்து 81 ஆயிரம் மதிப்பிலான கடனுதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மரு. ந.சுப்பையன், இ.ஆ.ப., தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் திரு. ம.அந்தோணிசாமி ஜான் பீட்டர், கூடுதல் பதிவாளர்கள் டாக்டர். ந.வில்வ சேகரன், திருமதி. ஆ.க.சிவமலர், திரு.ச சுப்பிரமணியன், திருமதி. ந.மிருணாளினி, டாக்டர். டி.அமலதாஸ், திரு. எம். முருகன், மண்டல இணைப்பதிவாளர் / தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி பொது மேலாளர் திருமதி. இரா.வே.காவேரி உட்பட கூட்டுவுத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர். ✤

கூட்டுறவே ! நாட்டுயர்வு!

# சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி லிமிடெட்


சேரி ரோடு, சேலம் – 636001, தொலைபேசி எண்: 0427 – 2451761–765

Email : slm_sdccbslm@yahoo.co.in & slmsdccb@dataone.in

Website : salemdccbank.com


மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக மிகச் சிறந்த சேவை புரிந்ததற்காக எட்டு முறை தங்கப்பதக்கமும், பாராட்டுப் பத்திரமும் பெற்ற வங்கி

## மிகக் குறைந்த வட்டியில் வழங்கும் கடன்கள் விவரம்

| | | |
|---|---|---|
| தனி நபர் நகைக்கடன் | ₹ 2.00 இலட்சம் வரை | 8.50% |
| | ₹ 2.00 முதல் ₹ 20.00 இலட்சம் வரை | 10.50% |
| புதிய வீடு கட்ட கடன் | ₹ 30.00 இலட்சம் வரை | 9.00% |
| வீடு அடமானக் கடன் | ₹ 20.00 இலட்சம் வரை | 10.00% |

| இட்டுவைப்புக் காலம் | வட்டி விகிதம் | |
|---|---|---|
| | பொதுமக்களுக்கு | மூத்த குடிமக்களுக்கு |
| 1 முதல் 2 வருடங்கள் வரையிலான இட்டுவைப்புகளுக்கு | 6.00% | 6.50% |

## வங்கியின் சிறப்பு அம்சங்கள்

- 110 ஆண்டுகளாகத் தொடர்ந்து இலாபத்தில் இயங்கிவரும் வங்கி
- சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் 74 கிளைகளில் வங்கியியல் சேவை
- ரூ.3500 கோடிக்குமேல் இட்டுவைப்பு
- நடைமுறை மூலதனம் ரூ.4397.07 கோடிக்குமேல்
- நவீனமயமாக்கப்பட்ட கிளைகள்.
- ஏ.டி.எம். சேவை
- விரைவான நகைக்கடன் வசதி
- RTGS & NEFT மற்றும் Mobile Banking வசதிகள்
- Micro ATM மூலம் AePS முறையில் பணம் செலுத்துதல் மற்றும் பெறும் வசதி
- இதர வங்கி ATM Card மூலம் பணம் பெறும் வசதி
- குறைந்த வாடகையில் பாதுகாப்புப் பெட்டக வசதி
- சேமிப்புக் கணக்குகள் துவங்குவதில் விரைவான சேவை
- பள்ளி மாணவர்களுக்கு சேமிப்பு கணக்கு சேவை (SSS SB A/C)
- PMSBY/PMJJBY காப்பீட்டுத் திட்ட வசதி
- விரைவான நகைக் கடன் வசதி
- மகளிர் / ஆடவர் சிறுவணிகக் கடன்
- நுகர்வோர் கடன்
- இருசக்கர வாகனக் கடன்
- மாற்றுத்திறனாளிகள் கடன்
- மகளிர் தொழில் முனைவோர் கடன்
- மகளிர் சுய உதவிக் குழுக் கடன்
- பணிபுரியும் மகளிருக்கான கடன்
- கூட்டுப் பொறுப்புக்குழு கடன்
- சம்பளக்கடன்
- மத்திய கால விவசாய கடன் (MT Agri Loan)
- சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோருக்கான கடன் (MSME Loan)

கூடுதல் பதிவாளர் / மேலாண்மை இயக்குநர்

தலைவர்



சென்னை, கோபாலபுரத்தில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நவீனமயமாக்கப்பட்ட அமுதம் மக்கள் அங்காடியை 08.07.2023 அன்று திறந்து வைத்து பார்வையிட்டார். உடன், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. அர.ச்சகரபாணி அவர்கள், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் மரு. நா.எழிலன், துணை மேயர் திரு. மு.மகேஷ்குமார், கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை செயலாளர் முனைவர் டி.ஜகந்நாதன், இ.ஆ.ப., உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் திரு. வே.ராஜாராமன், இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மரு. ந.சுப்பையன், இ.ஆ.ப., தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிர்வாக இயக்குநர் திரு. அ.சிவஞானம், இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மேலாண்மை இயக்குநர் திரு. ஆ.அண்ணாதுரை, இ.ஆ.ப., மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி சரகம் வெண்ணாவல்குடி பிரதம வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின்கீழ் இயங்கும் வன்னியன் விடுதி பகுதி நேர நியாயவிலைக் கடையை மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை அமைச்சர் திரு. சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் 11.07.2023 அன்று திறந்து வைத்து முதல் விற்பனையைத் துவக்கி வைத்தார். உடன், கூட்டுறவுத்துறை அலுவலர்கள், அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் பலர் உள்ளனர்.



மின்அஞ்சல்: ncmsooty@gmail.com
போன்: 2442339, 2443975, 2443028

# நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் லிமிடெட்

**நெ.கே.708,**

**செயிலிங் ஹவுஸ், உதகமண்டலம்**

எங்களது நிறுவனம், நீலகிரி மாவட்ட விவசாயிகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கு நல்ல நண்பனாக, நல்லதொரு வழிகாட்டியாக செயலாற்றி வருகிறது.

- 86 வருடங்களாக நீலகிரி விவசாயிகளின் நம்பிக்கை பெற்ற நிறுவனம்.
- நீலகிரி விவசாயிகளுக்கு தரமான கலப்பு உரங்கள் உரக்கலவை இயந்திரங்கள் மூலம் தயாரித்து வழங்கப்பட்டு வருகிறது.
- தரமான விதைகள் மற்றும் விவசாய இடுபொருட்கள் மற்றும் வேளாண் கருவிகள் - விநியோகம்
- கோவை மாவட்டம், மேட்டுப்பாளையத்தில் உலகப்புகழ் பெற்ற உருளைக்கிழங்கு ஏல விற்பனை மையம்
- மேட்டுப்பாளையம் கிளையில் உறுப்பினர்கள் நலன் கருதி தங்கும் விடுதி
- உறுப்பினர்களுக்கு குறைந்த வட்டியில் உடனடியாக நகைக்கடன்
- உதகை மற்றும் கூடலூரில் சமையல் எரிவாயு விநியோகம்
- உதகையில் விவசாயிகளின் மலைக்காய்கறிகள் ஏல விற்பனை மையம்
- உறுப்பினர்கள் மற்றும் விவசாயிகளின் நலன் கருதி உதகையின் மையப்பகுதியில் 60 டன் எடைகொண்ட கணினி எடைமேடை
- உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் நலன் கருதி உதகை மற்றும் கோத்தகிரியில் இரண்டு கல்யாண மண்டபங்கள் செயல்பட்டு வருகிறது.






**திரு. எஸ்.ஐயப்பன்**
கூட்டுறவு சார்பதிவாளர்/
செயலாளர்

**திரு. என்.ராமன்**
துணைத்தலைவர்
(தலைவர் பொறுப்பு)

**திரு வெ.தமிழ்ச்செல்வன்,** M.A., M.Phil.,
துணைப்பதிவாளர்/மேலாண்மை இயக்குநர்

# திருவள்ளூர் மண்டலத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மரு. ந.சுப்பையன், இ.ஆ.ப., ஆய்வு



**கூ**ட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மரு. ந.சுப்பையன், இ.ஆ.ப., அவர்கள் திருவள்ளூர் மண்டலத்தில் செயல்பட்டு வரும் கூட்டுறவுச் சங்கங்களை 24.6.2023 அன்று ஆய்வு செய்தார்.

**திரூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம்**

இந்தியாவில் முதன்முறையாக பதிவு செய்யப்பட்டு செயல்பட துவங்கிய சங்கமான நெ,1 திரூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் பழமையினை போற்றும் வகையில் திரூர் கிராமத்தில் கூட்டுறவு அருங்காட்சியகம் அமைக்கப்படும் என 6.4.2023 அன்று கூட்டுறவுத்துறை மானியக் கோரிக்கையின் போது அறிவிப்பு வெளியிடப்பட்டது. இது தொடர்பாக திரூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தினை ஆய்வு



செய்த பதிவாளர் அவர்கள் அருங்காட்சியகம் அமைக்கப்பட உள்ள இடத்தினை பார்வையிட்டார். கட்டிட வரைபடத்தில் சில மாறுபாடுகளுடன் விரிவான திட்ட அறிக்கை தயாரித்து அனுப்ப அறிவுரை வழங்கப்பட்டது. திரூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் அன்றாட நடவடிக்கைகள் ஆய்வு செய்யப்பட்டது. திரூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் ஆய்வு நாளன்று "அ" வகுப்பு அங்கத்தினர்கள் 2969 நபர்கள் உள்ளனர். நடைமுறை மூலதனம் ரூ. 153.37 இலட்சமாக உள்ளது. சேமிப்புக் கணக்கில் சேமிப்பு ரூ. 10.53 இலட்சமாக உள்ளது. நாளது தேதியில் இச்சங்கத்தில் நகைக்கடன் ரூ. 52.76 இலட்சம், மகளிர் சுய உதவிக்குழுக் கடன் ரூ. 8.64 இலட்சம், விவசாயக் கடன் ரூ. 34.07 இலட்சம், கால்நடை பராமரிப்பு கடன் ரூ. 47.52 இலட்சம், இதர கடன்கள் ரூ. 18.33 இலட்சம் என மொத்த கடன் நிலுவை ரூ. 161.32 இலட்சம் ஆக உள்ளது. அதே போன்று 2022–23ம் நிதியாண்டில் வட்டி யில்லா பயிர்க் கடன் ரூ. 20.39 இலட்சம், நகைக்கடன் பொது ரூ. 69.24 இலட்சம், கால்நடை பராமரிப்பு கடன் ரூ. 12.24 இலட்சம் என மொத்தம் ரூ. 101.87 இலட்சம் உறுப்பினர்களுக்கு கடனாக வழங்கி செயல்படுகிறது. இச்சங்கத்தில் நாளது தேதியில் தவணை தவறிய கடனாக நகைக்கடன் 1 இனம் ரூ. 47,450/– உள்ளது. இதனை வசூல் செய்ய நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப் பட்டது. தணிக்கை 2015–16ஆம் ஆண்டு வரை மட்டும் முடிந்துள்ளது. சங்கம் நடப்பு நட்டம் ரூ. 6.92 இலட்சத்துடன், குவிந்த நட்டம் ரூ. 107.84 இலட்சத்துடன் செயல் படுவதாக சங்க செயலாளரால் தெரிவிக்கப் பட்டது.

✤ மேற்படி சங்கம் குறைந்தபட்சம் கடன் நிலுவையினை ரூ. 3.00 கோடி அளவிற்கு உயர்த்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

✤ இச்சங்கம் கணினியில் பதிவுகள் மேற்கொள்ளும் பணி M/s Onward பணியாளரால் மேற்கொள்ளப்படுவதாக சங்க செயலாளரால் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக சங்க பணியாளரால்

சங்கத்தின் அன்றாட நடவடிக்கைகள் கணினியில் மேற்கொள்ளப்பட அறிவுரைகள் வழங்கப்பட்டது.

✤ ஆய்வு நாளன்று (24.6.2023) கையிருப்புத் தொகை ரூ. 71,273.85 இருந்தது. சங்கத்தில் அமைக்கப் பட்டிருந்த strong room with defendor door ரினை பார்வையிட்டு பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்யப்பட்டது. மேலும், அலாரம், CCTV, ஆகியன செயல்படுவதை தினந்தோறும் உறுதி செய்ய வேண்டும் என அறிவுரை வழங்கப்பட்டது.

✤ இச்சங்கம் நடத்தும் பொது சேவை மையம் பதிவாளரால் பார்வையிடப் பட்டது. நாள் ஒன்றுக்கு 10 முதல் 15 சேவைகள் வரை இச்சேவை மையத்தில் வழங்கப்படுவதாக சங்க செயலாளரால் தெரிவிக்கப்பட்டது. இடம் சுத்தமாக பராமரிக்கப்பட வேண்டும் எனவும், இச்சேவை மையத்தினை பழைய கட்டிடத்திலிருந்து புதிய அலுவலகத்திற்கு மாற்றி அமைக்கப்பட வேண்டும் என அறிவுரை வழங்கப்பட்டது.

✤ புதிய உறுப்பினர்கள் அதிக அளவில் சேர்த்து பயிர்க் கடன், கறவை மாட்டுக் கடன் நகைக்கடன் உள்ளிட்ட கடன்களை அதிக அளவில் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

✤ தணிக்கையினை நாளது தேதி வரை முடித்திட நடவடிக்கை மேற்கொள்ளவும், நடப்பு இலாபத்துடன் செயல்படவும், குவிந்த நட்டம் தொகை ரூ. 107.84 இலட்சத்தினை முழுவதுமாக குறைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று பதிவாளர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

இச்சங்கத்தின் கட்டுப்பாட்டில் 3 முழு நேர நியாயவிலைக்கடைகள் மற்றும் 3 பகுதி நேர நியாயவிலைக்கடைகள் என மொத்தம் 6 நியாயவிலைக்கடைகள் செயல்படுகிறது.

✤ திரூர் நியாயவிலைக்கடை ஆய்வின் போது இக்கடையில் கோணி இருப்பு அதிகமாக இருந்தது . இதனை MSTC மட்டுமல்லாமல் NCDFI நிறுவனத்தின் மூலமாகவும் மாதத்திற்கு 3 அல்லது 4 முறை பதிவேற்றம் செய்து உடன் விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அறிவுரை வழங்கப்பட்டது.

✤ நியாயவிலைக்கடை சுத்தமாக பராமரிக்கப்பட வேண்டும் எனவும்.

அத்தியாவசியப் பொருட்கள் சிறப்பு பொது விநியோகத்திட்ட பொருட்கள் நீண்ட நாட்கள் இருப்பு நிலுவையில்லாமல் முதலில் வந்த பொருட்கள் முதலில் விநியோகம் செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

✤ துவரம் பருப்பு அளவு மிகவும் சிறியதாக, மைசூர் பருப்பு மாதிரி இருப்பதாக மக்கள் குறை தெரிவித்தார்கள். தரமான பருப்பு வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

✤ கோதுமை போதிய அளவு ஒதுக்கீடு பெற்று விநியோகம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப் பட்டது.

**பிராங்குப்பம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம்**

பின்னர் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்கள் பிரயாங்குப்பம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தினை ஆய்வு செய்தார். இச்சங்கம் 21.3.1967 ல் பதிவு செய்யப்பட்டு, 23.3.1967 முதல் செயல்படத் துவங்கியுள்ளது. 2021–22 ஆம் ஆண்டு வரை இச்சங்கத்தின் தணிக்கை நிறைவுற்று நடப்பு நட்டம் ரூ. 36.32 இலட்சத்துடனும், ரூ. 114.00 இலட்சம் குவிந்த நட்டத்துடனும் செயல் பட்டு வருகிறது. இச்சங்கம் மொத்தம் 2139



உறுப்பினர்களுடன், ரூ. 34.06 இலட்சம் பங்குத் தொகை பெற்றுள்ளது. இச்சங்கத்துடன் பிரயாங்குப்பம், காரணி, ஆட்டுபாக்கம், கோவிலாம்பூண்டி, ஏகாட்டூர், மற்றும் அதிகத்துர் கிராமங்கள் இணைக்கப்பட்டு பயிர்க் கடன், நகைக்கடன் உள்ளிட்ட பொருளாதார மேம்பாட்டு கடன்கள் வழங்கப்படுகிறது.

✤ நாளது தேதியில் இச்சங்கத்தில் நகைக்கடன் ரூ. 595.36 இலட்சம், மகளிர் சுய உதவிக்குழு கடன் ரூ. 9.05 இலட்சம், விவசாய கடன் ரூ. 123.60 இலட்சம், கால்நடை பராமரிப்பு கடன் ரூ. 15.40 இலட்சம், இதர கடன்கள் ரூ. 73.77 இலட்சம் என மொத்த கடன் நிலுவை ரூ. 817.18 இலட்சமாக உள்ளது.

✤ அதே போன்று 2022–23 நிதி யாண்டில் வட்டியில்லா பயிர்க் கடன் ரூ. 122.85 இலட்சம், நகைக்கடன் பொது ரூ. 793.93 இலட்சம், கால்நடை பராமரிப்பு

கடன் ரூ. 15.40 இலட்சம், தானிய ஈட்டுக்கடன் ரூ. 53.00 இலட்சம் மகளிர் சுய உதவிக்குழு கடன் ரூ. 6.72 இலட்சம், விதவை பெண்கள் கடனுதவி ரூ. 0.50 இலட்சம் என மொத்தம் ரூ. 992.65 இலட்சம் உறுப்பினர்களுக்கு கடனாக வழங்கி செயல்படுகிறது.

✤ இச்சங்கத்தில் நாளது தேதியில் தவணை தவறிய கடனாக பயிர் கடன் 1 இனம் ரூ. 46,000, நகைக்கடன் 6 இனம் ரூ. 2,70,000, சிறுவணிக்கடன் 9 இனம் ரூ. 38,000, மத்திய காலக்கடன் 1 இனம் ரூ. 42,000 என மொத்தம் ரூ. 3.96 இலட்சம் உள்ளது. இதனை வசூல் செய்ய நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டது.

சங்கத்தின் அன்றாட நடவடிக்கைகள் அனைத்தும் கணினி வழியாக சங்க செயலாளரால் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வாடிக்கையாளர்களுக்கும் பாஸ்புத்தகம் பதிவுகள் கணினி வழியாக மேற்கொள்ளப்படுகிறது என தெரிவிக்கப்பட்டது. இச்சங்கம் PACS as MSC திட்டத்தின் கீழ் ரூ. 32.11 இலட்சம் செலவில் ஜெ.சி.பி இயந்திரம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதற்கு நபார்டு வங்கி கடனாக ரூ. 28.01 இலட்சம், 4 சதவீதம் வட்டியில் அனுமதிக்கப் பட்டுள்ளது. இந்த JCB இயந்திரம்



பதிவாளர் அவர்களால் துவக்கி வைக்கப் பட்டது. இந்த இயந்திரத்தினை நல்ல முறையில் பயன்படுத்தி இலாபம் ஈட்ட வேண்டும் என பதிவாளர் அவர்களால் அறிவுரை வழங்கப்பட்டது.

✤ இச்சங்கம் தணிக்கை 2021–22 ஆம் ஆண்டு வரை முடிக்கப்பட்டுள்ளது. சங்கம் நடப்பு நட்டம் ரூ. 36.32 இலட்சத்துடன், குவிந்த நட்டம் ரூ. 114.00 இலட்சத்துடன் செயல்படுவதாக சங்க செயலரால் தெரிவிக்கப்பட்டது. இதனை நிகர லாபத்தில் செயல்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

✤ சங்கம் பொது சேவை மையத்தின் மூலம் நடப்பு திங்கள் முடிய 596 சேவைகள் ரூ. 35,760 ஈட்டி செயல்பட்டுள்ளது. இந்த இ–சேவையினை துரிதமாக பொதுமக்களுக்கு வழங்கி


IFFCO
இந்திய உழவர் உரக்கூட்டுறவு நிறுவனம்
மகசூலை அதிகரிக்கும் கடற்பாசி உரம்
சாகரிகா
சாகரிகா
திரவ உரம்
ஏக்கருக்கு
500ml / Rs.260/-
பூக்கள் மற்றும் காய்களின் எண்ணிக்கையை அதிகரிக்கிறது.
நெற்பயிரில் மணிகளை அதிக அளவு உருவாக்கி மகசூலை அதிகரிக்கிறது.
வேர் மற்றும் தண்டின் வளர்ச்சியை அதிகரிக்கிறது.
அதிக தூர்களை உருவாக்குகிறது.
சாகரிகா
குருணை உரம்
10kg / Rs.515/-
25kg / Rs.960/-
விலை குறைவு ! விளைச்சல் அதிகம் !!
IMO தரச்சான்றிதழ் பெற்ற ஒரே இயற்கை உரம்
மத்திய கடல் சார் ஆராய்ச்சி நிறுவனத்தால் பரிந்துரைக்கப்பட்டது

மேலும் வியாபார நடவடிக்கையினை பெருக்கிட அறிவுறுத்தப்பட்டது.

✤ வங்கியின் அனைத்து கடன் நிலுவையினை உயர்த்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப் பட்டது. மேலும், திருவள்ளூர் மண்டலத் தில் செயல்படும் அனைத்து பொது சேவை மையங்களில் சேவைகளின் எண்ணிக்கை குறித்து பதிவாளர் அலுவலகத்திலிருந்து பொதுசேவை மையம் பிரிவிலிருந்து விவரம் பெற்று அதிக எண்ணிக்கையிலான சேவைகள் வழங்கிட அறிவுறுத்தப்பட்டது.

✤ இச்சங்கம் அதற்கு சொந்தமான 100 மெ.டன் அளவுள்ள கிடங்கினை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்திற்கு நேரடி நெல்கொள்முதல் நிலையத்தின் பயன்பாட்டிற்கு வழங்கப் பட்டுள்ளது. ஆனால், வாடகை மற்றும் மின்சார செலவினங்கள் பெறப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. இம்மாவட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் நேரடி நெல் கொள்முதலுக்கு பயன்படுத்தும் கிடங்குகளின் வாடகை மின்சாரம் கட்டணம் தொடர்பாக செலவினங்கள் பெற நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

**கடம்பத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம்**

பின்னர், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்கள் கடம்பத்துர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தினை ஆய்வு செய்தார். இச்சங்கம் 20.11.1958–ல் பதிவு செய்யப்பட்டு, 15.12.1958 முதல் செயல்படத் துவங்கி யுள்ளது. இச்சங்கத்தில் 2021–22ம் ஆண்டு வரை தணிக்கை நிறைவுற்று ரூ. 1.33 இலட்சம் நிகர இலாபத்துடன் செயல் படுகிறது.

இச்சங்கம் மொத்தம் 6,557 உறுப்பினர்களுடன், ரூ. 26.64 இலட்சம் பங்குத் தொகை பெற்றுள்ளது. உறுப்பினர் சேமிப்பு கணக்கில் ரூ. 13.06 இலட்சம் உள்ளது.

இச்சங்கத்துடன் கடம்பத்தூர், கசவநல்லாத்தூர், வெண்மனம்புதூர், விடையூர், பானம்பாக்கம், மடத்துக்குப்பம், மற்றும் இராமன்கோவில் கிராமங்கள் இணைக்கப்பட்டு பயிர்க் கடன், நகைக் கடன் உள்ளிட்ட பொருளாதார மேம்பாட்டு கடன்கள் வழங்கப்பட்டு வருகிறது.

✤ நாளது தேதியில் இச்சங்கத்தில் நகைக்கடன் ரூ. 2032.82 இலட்சம், விவசாய கடன் ரூ. 114.52 இலட்சம், கால்நடை பராமரிப்பு கடன் ரூ. 10.36 இலட்சம், இதர கடன்கள் ரூ. 168.36

இலட்சம் என மொத்த கடன் நிலுவை ரூ. 2,211.54 இலட்சமாக உள்ளது.

✤ அதே போன்று 2022–23 ஆம் நிதியாண்டில் வட்டியில்லா பயிர்க் கடன் ரூ. 127.44 இலட்சம், நகைக்கடன் பொது ரூ. 2,763.35 இலட்சம், கால்நடை பராமரிப்பு கடன் ரூ. 7.56 இலட்சம், இதர கடன்கள் ரூ. 25.73 இலட்சம் என மொத்தம் ரூ. 2,924.08 இலட்சம் கடனாக வழங்கி செயல்படுகிறது.

✤ இச்சங்கத்தில் தவணை தவறிய கடன் நகைக்கடன் 432 இனங்கள் ரூ. 159.52 இலட்சம், சிறுவணிகக்கடன் 54 இனங்கள் ரூ. 1.27 இலட்சம் ஆக மொத்தம் ரூ. 160.79 இலட்சம் உள்ளது. இதனை வசூல் செய்ய நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டது.

இச்சங்கத்தின் அன்றாட நடவடிக்கைகள் சங்க பணியாளர்கள் கணினி வழி பதிவுகள் மேற்கொண்டு வருகின்றனர். இச்சங்கம் பொது விநியோகத்திட்டத்தின் கீழ் கடம்பத்தூர்–1, கடம்பத்தூர், கசவநல்லாத்தூர்–1, வெண்மணம்புதூர்–1, வெண்மணம்புதூர்–2, விடையூர்–1, விடையூர்–2, இந்திரா நகர், பானம்பாக்கம், மடத்துக்குப்பம், இராமன் கோவில் ஆகிய கூட்டுறவு நியாயவிலைக் கடைகளை நடத்தி வருகிறது. மொத்தம் 6,007 குடும்ப அட்டைகள் இணைக்கப் பட்டுள்ளது.

✤ இச்சங்கம் இலாபத்தில் செயல்பட்டு வருகிறது. கடன் நிலுவை ரூ. 22.00 கோடியாக உள்ள நிலையில், கடன் நிலுவையினை உயர்த்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

✤ இச்சங்கம் மருதம் என்ற பிராண்ட் பெயரில் செக்கு எண்ணெய் தயாரித்து விற்பனை செய்கிறது. மருதம் செக்கு எண்ணெய் அதிகபட்ச விற்பனை விலை என குறிப்பிட்டுள்ள தொகைக்கு குறைவாகவே ரசீது போடப்பட்டிருந்தது. பொதுமக்களுக்கு அதிக பட்ச விலையினை குறைத்து வழங்கும் தொகைக்கு இரசீதில் தனியே "தள்ளுபடி" என குறிப்பிட்டு இரசீதுகள் வழங்க அறிவுறுத்தப்பட்டது. மருதம் செக்கு எண்ணெய் விற்பனை என தனியே வரிசை எண்கள் குறிப்பிடப்பட்ட இரசீது புத்தகம் அச்சடித்து பெற்று முறையாக விற்பனை செய்ய அறிவுரை வழங்கப்பட்டது.

✤ இச்சங்கத்தில் கணினியில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. உறுப்பினர்களுக்கு "பாஸ் புத்தகம்" கையில் எழுதப்பட்டு வழங்கப்படுகிறது. இதனை கணினி பிரிண்டர் மூலமாக பதிவுகள் மேற்கொள்ளப்பட அறிவுரை வழங்கப் பட்டது.

✤ வங்கியின் அனைத்து கடன் நிலுவையினை உயர்த்திட நடவடிக்கை மேற்கொள்ளவும், தவணை தவறிய கடன் இனங்கள் ரூ. 1.27 இலட்சமும் வசூல் செய்யவும் நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டது.

**கடம்பத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் நடத்தும் கசவநல்லாத்தூர் நியாய விலைக்கடை ஆய்வு செய்யப் பட்டது.**

இக்கடையில் இருப்பு உள்ள அத்தியாவசியப் பொருட்களின் பெயர்களை அந்தந்த வரிசையில் எழுதி பராமரிக்க வேண்டும் எனவும், மூட்டைகளின் மீது வரிசை "எண்" எழுதவும் முதலில் வந்த பொருட்கள் முதலில் விநியோகம் செய்யவும் அறிவுறுத்தப்பட்டது.

இக்கடையுடன் இணைக்கப்பட்ட கூட்டுறவு சிறப்பு அங்காடியில் கட்டுப்பாடற்ற பொருட்கள் மிகவும் குறைந்த அளவே இருப்பு இருந்தது. அதிக



அளவில் கூட்டுறவு நிறுவனங்கள் தயாரிப்புகள் வாங்கி விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அறிவுரை வழங்கப்பட்டது.

இவ்வாய்வின் போது கூட்டுறவுச் சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர், திருமதி. தமிழ்செல்வி, திருவள்ளூர், கூடுதல் பதிவாளர் / மேலாண்மை இயக்குநர் திரு. மு.முருகன், காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கி, துணைப்பதிவாளர் / பணியாளர் அலுவலர், இணைப்பதிவாளர் அலுவலகம், சரக துணைப்பதிவாளர் திருவள்ளூர் (பொ), துணைப்பதிவாளர் பொன்னேரி மற்றும் கள அலுவலர்கள் உடன் இருந்தனர். ✤


துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனம் (வரை)
THE TUDIYALUR CO-OPERATIVE AGRICULTURAL SERVICES LIMITED. NO. K. 1550
டியூகாஸ் பூச்சிக்கொல்லி மருந்துகள்
கோவை விதைகள்
ஒரே கூரையின் கீழ் அனைத்து இடுபொருட்களும்
TUCAS
விவசாய உபகரணக் கருவிகள்
வங்கிப் பணிகள்
அசோகா மார்க் கலப்பு உரங்கள் பயன்படுத்திய பயிர்கள்
அசோகா மார்க் கலப்பு உரங்கள்
Tudiyalur Post, Coimbatore - 641 034, TAMILNADU, INDIA
Phone : +91 0422 2642322, +91 0422-2642722, Fax: +91 0422-2642833
Email : tucas_1955@yahoo.co.in, info@tucas.org
Website : www.tucas.org



தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கூடுதல் பதிவாளர் / செயலாட்சியர் திரு. கோ.க.மாதவனிடம் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி மற்றும் கூட்டுறவு கல்வி நிதி ரூ. 22.25 இலட்சத்திற்கான காசோலையை திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு ஒன்றியத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. இரா.கணேசசேதுராமலிங்கம் வழங்கினார்.



தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கூடுதல் பதிவாளர் / செயலாட்சியர் திரு. கோ.க.மாதவன் தூத்துக்குடி கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற கூட்டுறவு மேலாண்மை பட்டயப் பயிற்சி இறுதி பருவத் தேர்வினை 10.7.2023 அன்று திடீர் ஆய்வு செய்தார். தூத்துக்குடி மேலாண்மை பயிற்சி நிலைய முதல்வர் திரு. நா.சு.மணி உடனிருந்தார்.



மதுரை மாவட்டம் கூட்டுறவுத்துறை மூலம் கள்ளிக்குடி வட்டாரத்தில் உள்ள க.வெள்ளாகுளம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் உறுப்பினர்கள் சேர்க்கை அதிகரிக்கும் பொருட்டு உறுப்பினர் கல்வித் திட்டம் 27.6.2023 அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், மதுரை மாவட்ட கூட்டுறவு ஒன்றிய மேலாண்மை இயக்குநர் திரு. தீனதயாளன் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் செயல்படுத்தி வரும் அனைத்து திட்டங்கள் பற்றியும், சங்க உறுப்பினர்களாக சேருவதால் விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் கிடைக்கும் பல்வேறு வகையான கடன்கள் பற்றியும் விளக்கி கூறினார். மேலும் இந்நிகழ்ச்சியில், துணைப்பதிவாளர் (ஓய்வு) திரு. ராமலிங்கம், மதுரை சின்ன உடைப்பு கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலைய விரிவுரையாளர் திரு கதிரவன், கூட்டுறவு வளர்ச்சி அலுவலர் திரு. உதயகுமார், சங்க செயலாளர் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.



கரூர் மாவட்டத்தில் கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதியில் தாந்தோணி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் ஏமூர்புதூர் பகுதி நேர கூட்டுறவு நியாயவிலைக் கடையின் புதிய கட்டடத்தை கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி. சிவகாமசுந்தரி திறந்துவைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு பொருட்கள் வழங்கினார். அருகில், கரூர் சரகத் துணைப்பதிவாளர் திரு. ஆறுமுகம், பொதுவிநியோகத்திட்ட துணைப்பதிவாளர் திருமதி அபிராமி மற்றும் பொதுமக்கள் உள்ளனர்.

# பெண்களின் சமூக பொருளாதார முன்னேற்ற வளர்ச்சியில் பொத்தேரி கிராம இணை உணவு தயாரிப்போர் மகளிர் மேம்பாட்டு தொழிற் கூட்டுறவு சங்கம்



செங்கல்பட்டு மாவட்டத்தில் பொத்தேரி கிராம இணை உணவு தயாரிப்போர் மகளிர் மேம்பாட்டு தொழிற் கூட்டுறவு சங்கம் அமைந்துள்ளது. இச்சங்கம் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983–ன்படி 18.12.1988 – 23.10.1989 நாள் அன்று பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கமாகும். இச்சங்கம் சமூக நலத்துறை ஒருங் கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் கட்டுப்பாட்டில் செயல்படுகிறது.

இச்சங்கம் தனது உற்பத்தியை 15.3.1996 முதல் தொடங்கப்பட்டு நாளது தேதி வரை செயல்பட்டு வருகிறது. இதன் நோக்கம் சங்கத்தின் உறுப்பினர்களுக்கு தொடர்ச்சியான வேலை வாய்ப்பினை அளித்து அதன் மூலம் அவர்களின் சமூக மற்றும் பொருளாதார நிலையை உயர்த்துதலும் ஆகும். உறுப்பினர்களின் தகுதியை பொறுத்தமட்டில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் ஏழை மகளிர் மற்றும் கணவரால் கைவிடப்பட்ட பெண்கள், விதவைகள், ஆதரவற்றோர் மற்றும் ஊனமுற்றோர் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். தற்போது சங்கத்தில் 33 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களில் 32 பேர் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் ஒருவர் பிறபடுத்தப் பட்டவர் ஆவார்.

இச்சங்கத்தின் 2022–2023 ஆம் ஆண்டு முடிவில் அரசின் பங்குத்

தொகையாக ரூ. 7,500-ம் சங்க உறுப்பினர்களின் பங்குத் தொகையாக ரூ. 44.96 இலட்சம் உள்ளது.

**சத்துமாவு உற்பத்தி**

உறுப்பினர்களுக்கான பயிற்சி அளிக்கப்பட்ட பின்னர் 15.3.1996 முதல் இச்சங்கத்தில் இணை உணவு உற்பத்தி செய்து வருகிறது. ஆரம்பத்தில் மாதமொன்றிற்கு 12,000 மெ.டன் மட்டுமே உற்பத்தி செய்த சங்கம் தற்போது 100,000 மெ.டன் உற்பத்தி செய்து அங்கன்வாடி மையங்களுக்கு விநியோகம் செய்து வருகிறது.

**உற்பத்திக்கு பயன்படுத்தும் மூலப்பொருட்கள்**

இணை உணவில் கீழ்க்கண்ட அளவுகளில் மூலப்பொருட்கள் கலந்துள்ளது.

**குழந்தைகளுக்கான சத்துமாவு**

| வ. எண். | மூலப்பொருட்கள் | அளவு கிராம் |
|---|---|---|
| 1. | வறுத்த கோதுமை மாவு | 18.5 |
| 2. | வெல்லத்தூள் | 24.0 |
| 3. | வறுத்த சோயா மாவு | 16.50 |
| 4. | வறுத்த நிலக்கடலை மாவு | 08.0 |
| 5. | முளைக்கட்டிய கேழ்வரகு மாவு | 05.0 |
| 6. | தாது உப்புகள் (ம) வைட்டமின்கள் | 01.0 |
| | மொத்தம் | 100.0 |

**கர்ப்பிணி தாய்மார்களுக்கான சத்துமாவு**

| வ. எண். | மூலப்பொருட்கள் | அளவு கிராம் |
|---|---|---|
| 1. | வறுத்த கோதுமை மாவு | 45.5 |
| 2. | வெல்லத்தூள் | 14.0 |
| 3. | வறுத்த சோயா மாவு | 10.00 |
| 4. | வறுத்த கடலை மாவு | 10.0 |
| | வறுத்த உளுத்தம் பருப்பு மாவு | 05.0 |
| | செறிவூட்டப்பட்ட பாமாலின் எண்ணெய் | 05.0 |
| | முளைக்கட்டிய கேழ்வரகு மாவு | 05.0 |
| 5. | வறுத்த வேர்கடலை மாவு | 04.0 |
| 6. | தாது உப்புக்கள் (ம) வைட்டமின்கள் | 01.5 |
| | மொத்தம் | 100 |

மேற்கண்ட சத்துமாவு தயாரித்தவுடன் இயக்குநரகத்திலிருந்து பெறப்படும் தேவைப்பட்டியலின்படி அங்கன்வாடி மையங்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

**உறுப்பினர்கள் அடையும் பயன்கள்**

இச்சங்கத்தில் தற்போது சத்துமாவு தயாரிக்க உறுப்பினர்களுக்கு ஒரு கிலோவிற்கு ரூ. 3.50 கூலியாக





வழங்கப்படுகிறது. மாதம் ஒன்றிற்கு ஒவ்வொரு உறுப்பினரும் ரூ. 14,000/– வரை கூலியாக பெற்று வருகிறனர். மேலும் சங்கம் ஈட்டிய நிகர இலாபத்தில் 50 சதவிகிதம் உறுப்பினர்களுக்கு போனஸாக வழங்கப்படுகிறது மற்றும் (டிவிடென்ட்) பங்கு ஈவுத்தொகை வழங்கப்படுகிறது. சங்க செலவில் உறுப்பினர்களுக்கு ஆண்டொன்றிற்கு இரண்டு செட் சீருடை வழங்கப்படுகிறது. மேலும் எப்ரான் தொப்பி, மாஸ்க், சாக்ஸ் போன்றவை சங்க செலவில் வழங்கப்படுகிறது. உறுப்பினர்களுக்கு பண்டிகை முன்பணம் மற்றும் ஆயுள் காப்பீடு முன்பணத் தொகை வழங்கப் படுகிறது. உறுப்பினர்களுக்கு தொழிலாளர் வருங்கால வைப்புநிதி கணக்கு துவக்கப்பட்டு ஓய்வூதியம் பெற்று வழங்கப்பட்டு வருகிறது. சங்கம் தொடர்ந்து இலாபத்தில் செயல்பட்டு வருகிறது

மேற்படி இச்சங்கத்தில் கடந்த 27.6.2023 அன்று உறுப்பினர் கல்வித் திட்ட முகாம் நடத்தப்பட்டது. இம்முகாமினை செங்கல்பட்டு மண்டல இணைப்பதிவாளர் திருமதி. தமிழ்ச்செல்வி தலைமையேற்று நடத்தினார். இம்முகாமில் திரு. எம்.ஜெகதீசன், ICO / நிர்வாக அலுவலர் வரவேற்புரை ஆற்றினார். ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர் திருமதி. எஸ்.சற்குணா மற்றும் செங்கல்பட்டு சரகத் துணைப்பதிவாளர் திருமதி ம.சுடர்விழி ஆகியோர் சிறப்புரை ஆற்றினார். நிறைவாக செங்கல்பட்டு மாவட்ட கூட்டுறவு ஒன்றிய கூட்டுறவு சார்பதிவாளர் / செயலாட்சியர் திரு. கோ.பாலாஜி நன்றி தெரிவித்தார். மேற்படி நிகழ்ச்சி இறுதியில் சங்கத்தின் சார்பில் சட்டபூர்வ நிதிக்கான காசோலை ரூ. 5,43,263/– சங்க நிர்வாக அலுவலர் மண்டல இணைப்பதிவாளரிடம் வழங்கினார். மேற்படி நிகழ்ச்சிக்கான முன்னேற்றபாடுகள் மற்றும் நிகழ்ச்சியினை செங்கல்பட்டு மாவட்ட கூட்டுறவு ஒன்றிய கூட்டுறவு வளர்ச்சி அலுவலர் திரு, கே.கோபிநாத் தொகுத்து வழங்கினார்.

இம்முகாம் நிறைவு பெற்ற பின்னர் செங்கல்பட்டு மாவட்ட மண்டல இணைப்பதிவாளர் சங்கத்தின் செயல்பாடுகள் குறித்து நேரில் பார்வையிட்டார். ✤

*சேமிக்க சிறந்த வங்கி !* *பாரம்பரியமிக்க வங்கி!*

# புதுக்கோட்டை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி லிட்.,

## புதுக்கோட்டை

## 102 ஆண்டுகளைக் கடந்து மக்கள் சேவையில்

நமது வங்கியானது 68ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் தமிழ்நாடு மாநில அளவில் சிறந்த வங்கியாக தேர்வு செய்யப்பட்டு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் விருது வழங்கப்பட்டது.

2019 – 20 ஆண்டிற்கான சிறந்த செயல்பாடு மற்றும் வளர்ச்சிக்கான விருது நபார்டு வங்கியின் மூலம் பெறப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்ட அளவில் அதிக மகளிர் சுய உதவிக் குழு கடன் வழங்கியதற்கான விருது மாவட்ட ஆட்சியர் மூலம் பெறப்பட்டது.

**வங்கியின் மூலம் வழங்கப்படும் சேவைகள்**

- மைய வங்கியில் சேவை (CBS)
- ஏ.டி.எம். சேவை (ATM Debit Card & KCC Card)
- குறுந்தகவல் சேவை (SMS)
- துரித பணப்பரிமாற்ற சேவை (RTGS/NEFT)
- செல்லிடை வங்கிச் சேவை (Mobile Banking)
- மைக்ரோ ஏ.டி.ஏம். வங்கிச் சேவை (Micro ATM)
- நடமாடும் ஏ.டி.எம். வாகன சேவை (Mobile Van ATM )
- பொது மக்களின் மதிப்புமிக்க பொருட்களின் பாதுகாப்பிற்கு தனிநபர் பாதுகாப்பு பெட்டக (Locker) வசதி
- அரசின் அனைத்து மானியங்களும் பெறும் இணையதள வசதி
- அடமான நகைகளுக்கு முழு பாதுகாப்பு மற்றும் காப்பீடு வசதி

**தனிநபர் நகைக்கடன் 5 நிமிடத்தில் மாலை 4 மணி வரை, அதிகபட்ச கடன் ரூ. 20.00 இலட்சம், குறைந்த வட்டியில்**

| வைப்புகளுக்கு (Deposits) வழங்கப்படும் வட்டி | |
|---|---|
| பொதுமக்களுக்கு | மூத்தகுடி மக்களுக்கு |
| 6.50% | 7.00% |

## கடன் சேவைகள்

- சுயஉதவிக்குழு கடன்
- மாற்றுத்திறனாளிகளுக்கான கடன்
- சிறுவணிகக் கடன்
- மகளிர் தொழில் முனைவோர் கடன்
- வீடு அடமானக்கடன்
- வீட்டு வசதிக்கடன்
- பணிபுரியும் மகளிர் கடன்
- தனிநபர் சம்பளக்கடன்
- பண்ணை சாராக்கடன்
- MSME கடன்
- கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கான கடன்
- டாப்செட்கோ கடன்
- டாம்கோ கடன்
- தாட்கோ கடன்
- அரசின் பல்வேறு திட்டக்கடன்
- பயிர்க் காப்பீட்டுத் திட்டம் (PMFBY)
- பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா திட்டம் (PMSBY)
- பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா திட்டம் (PMJJBY)

வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சிக்காக விவசாயிகளுக்கு 0% வட்டியில்
பயிர்க்கடன் மற்றும் குறைந்த வட்டியில் மத்திய காலக் கடன்கள்

**“வாடிக்கையாளர்களின் நேசமிகு துரித சேவையே வங்கியின் நோக்கம்”**
**இன்றே அணுகுவீர் !! வங்கியின் தலைமை அலுவலகம் மற்றும் 27 கிளைகள்**

**மேலாண்மை இயக்குநர்**
**புதுக்கோட்டை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிட்.,**



விருதுநகர் மாவட்டம், சாத்தூர் தியாகி சங்கரலிங்கனார் கூட்டுறவு மேலாண்மை நிலையத்திற்கு வருகை புரிந்த தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய கூடுதல் பதிவாளர் / செயலாட்சியர் திரு. கோ.க.மாதவனிடம் சட்டப்பூர்வ நிதிகள், வட்டியில்லா கடன் தொகை மற்றும் ஆண்டு சந்தா வசூல் தொகை ரூ. 1,01,68,179/–க்கான காசோலைகளை விருதுநகர் மண்டல இணைப்பதிவாளர் திரு. பா.செந்தில்குமார் வழங்கினார். இந்நிகழ்ச்சியின்போது, திருவில்லிபுத்தூர் சரகத் துணைப்பதிவாளர் திரு. மீ.வீரபாண்டி, மாவட்ட கூட்டுறவு ஒன்றிய மேலாண்மை இயக்குநர் திரு. எஸ்.காந்திராஜ், சாத்தூர் கள அலுவலர் திரு. செருக்கையா, கூட்டுறவு வளர்ச்சி அலுவலர் திரு. சிவப்பிரகாஷ், கூட்டுறவு ஒன்றிய பிரச்சார அலுவலர் திரு. மு.செல்வராஜன் ஒன்றிய அலுவலர் திரு. மு.முத்துக்குமரன் ஆகியோர் உள்ளனர்.


அமோக விளைச்சலை அள்ளித்தருமே

# கிரிப்கோ குருணை யூரியா




கிரிஷக்
பாரதி
கோஆப்பரேட்டிவ்
லிமிடெட்

KRIBHCO

அறை எண். 1, 2 & 3, ஆயத்த ஆடை வளாகம்,
திரு.வி.க.தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை– 600 032.

# மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிட்.,

M.D.C.C BANK Ltd



187, வடக்கு வெளி வீதி, மதுரை - 625 001.

தொலைபேசி எண் : 0452 - 2342051 முதல் 2342054 Fax : 0452 - 2345747

mdccbank@rocketmail.com, Post Box No. : 14

E-mail : mdccbank@rocketmail.com

## மக்கள் சேவையில் 112 ஆண்டுகள்

மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் 44 கிளைகளுடன் பொது மக்களின் பேராதரவால் ஒரு நூற்றாண்டைக் கடந்து சீரும் சிறப்புடன் செயல்பட்டு சேவை செய்து வருகின்றது

**வங்கியின் வைப்புத் தொகை : ரூ. 163692.18 இலட்சம்**

**வங்கி வழங்கியுள்ள கடன் தொகை : ரூ. 217508.62 இலட்சம்**

### வாடிக்கையாளர்களின் வைப்புத் தொகைகளுக்கு வங்கி வழங்கும் வட்டி விகிதம்

| | |
|---|---|
| சேமிப்பு கணக்கு (தினசரி நிலுவைக்கு) | 3.00% |
| கால வைப்புகள் | |
| 15 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை | 4.50% |
| 46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை | 5.00% |
| 91 நாட்கள் முதல் 180 நாட்கள் வரை | 5.50% |
| 181 நாட்கள் முதல் 364 நாட்கள் வரை | 6.50% |
| 12 மாதங்கள் முதல் 24 மாதங்கள் வரை | 7.25% |

**60 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் இட்டு வைக்கும் வைப்புகளுக்கு கூடுதல் வட்டி 0.50% வழங்கப்படுகிறது.**

### வங்கி கிளைகள் மூலம் வழங்கப்படும் கடன்கள்

* தனி நபருக்கு ரூ. 20.00 இலட்சம் வரை மிகக் குறைந்த வட்டியில் நகைக்கடன்
* புதிதாக வீடு கட்டுவதற்கான கடன் மற்றும் வீட்டு அடமானத்தின் பேரில் அடமானக் கடன்
* தொழில் முனைவோருக்கான கடன்
* சிறு வணிகக் கடன் மற்றும் சிறு வணிக கூட்டுப்பொறுப்புக் குழுக் கடன்
* விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த கடன்கள்
* மகளிர் சுய உதவிக் குழுக் கடன்
* பணிபுரியும் மகளிருக்கு கடன்
* கிளைகள் மூலம் மத்திய கால முதலீட்டுக் கடன்
* மாற்றுத்திறனாளிகளுக்கான கடன்
* MSME சிறுத் தொழில் உரிமையாளர்கள் / பங்குதாரர் நிறுவனங்கள்/ கம்பெனிகள் மற்றும் கூட்டுக் குழுக்களுக்குக் கடன்

இது போன்ற பலவகையான கடன்கள் வழங்கப்படுகின்றது. மேலும் விபரங்கள் தெரிந்து கொள்ள மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தலைமை அலுவலகம் மற்றும் 44 கிளைகளை தொடர்பு கொள்ள கேட்டுக் கொள்கிறோம்.

**மேலும் வாடிக்கையாளர்களுக்கு**

* **குறைந்த வாடகையில் பாதுகாப்பு பெட்டக வசதி**
* **ATM (தானியங்கி பணம் கொடுக்கும் இயந்திரம்) வசதி**
* **RTGS & NEFT வசதி உள்ளது.**
* **அலைபேசி வங்கியியல் சேவை** (Mobile Banking Service)
* **விரைவில் இணையதள வங்கி சேவை** (Net Banking Facility)

**செயல்பாட்டில் உள்ள வங்கியின் புதிய திட்டம்**

சிறுவர் / சிறுமியர்களுக்கான கண்மணி சேமிப்பு திட்டம். இத்திட்டத்திற்கு சாதாரண சேமிப்புக்கு வழங்கப்படும் வட்டியைக் காட்டிலும் கூடுதலாக 1% சேர்த்து 4% வட்டி வழங்கப்படும்.

**"இன்றைய சேமிப்பு ! நாளைய பாதுகாப்பு"**

**"கூட்டுறவு வங்கியில் சேமிப்பீர் வாழ்வை வளமாக்குவீர்"**

**மேலாண்மை இயக்குநர்**

**மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிட்.,**

# நிர்வாக நுணுக்கங்கள்!

– தென்கச்சி கோ.சுவாமிநாதன்

‘ஒரு ஆபிசுலே வேலை பார்க்கற ஒருத்தர் ஏதோ தப்பு பண்ணிபுட்டார்… உடனே, மேலதிகாரி அவரைக் கூப்பிட்டனுப்பினார்.’ “நீங்க செஞ்சது தப்பு!”ன்னார்– கோபமா! இது ஒரு ரகம்!

சில அதிகாரிகள் இப்படி… “ நீங்க செஞ்சது தப்பு”ன்னு சொல்லறதில்லே…

‘நீங்க செஞ்சது சரி இல்லை–ன்னு நான் நினைக்கிறேன்!’ அப்படின்னு சொல்லுவாங்க.

ரெண்டும் அர்த்தம் ஒண்ணுதான். இருந்தாலும் வார்த்தைகள் வித்தியாசம்!

நிர்வாகத் திறமை இல்லாத ஒரு அதிகாரி– “You are wrong”–ன்னு சொல்லுவாராம்.

நிர்வாகத் திறமையுள்ள அதிகாரி யாயிருந்தா அதையே கொஞ்சம் மாத்தி “I think you are not correct!” ம்பாராம்!

இதுதான் வித்தியாசம். இருந்தாலும் வார்த்தைகளை உபயோகப்படுத்தற விதத்தை வச்சித்தான் வேலை நல்லா நடக்கறதும்– நடக்காததும் இருக்கு!

விவரம் தெரிஞ்சவங்க என்ன சொல்றாங்கன்னா–

“Be a leader not a boss”

அப்படிங்கறாங்க!

ஒரு Leader ஆ இரு… Boss ஆ இருக்காதேங்கறாங்க! சரி… அப்படின்னா leader க்கும் Boss க்கும் வித்தியாசம் இருக்கா? இருக்கு!

ஒரு Leader எப்படி நடந்துக்குவார்? ஒரு Boss எப்படி நடந்துக்குவார்?

இதை முதல்லே நாம தெரிஞ்சிக் கணும்!

அவங்க எப்படி நடந்துக்குவாங்க –ங்கறதுக்கு சில விவரங்கள் இருக்கு. அதைச் சொல்றேன். கேட்டு வச்சிக்குங்க!

Boss-ங்கறவர் விரட்டிக் கிட்டேயிருப்பார்!

Leader-ங்கறவர் ஊக்கப்படுத்திக் கிட்டேயிருப்பார்!

நாளைக்கு சாயந்தரத்துக்குள்ளே அந்த வேலையை செஞ்சு முடிக்கலேன்னா தொலைச்சுப்புடுவேன்–ம்பார் அவர்! இதுவரைக்கும் நீங்க செஞ்சிருக்கிற வேலை ரொம்ப அற்புதம் சார்! அப்படிம்பார் இவர்!

Boss-ங்கறவர் அதிகாரத்தை நம்பி செயல்படுவார்! Leader-ங்கறவர் நல்லெண்ணத்தை நம்பி செயல்படுவார்!

நம்மகிட்டே அதிகாரம் இருக்கு – Power இருக்கு– அதனாலே காரியத்தை சாதிச்சுடலாம்–ன்னு நினைக்கிறவர் அவர்… மத்தவங்க கிட்டே ஒரு நல்ல அபிப்பிராயத்தை சம்பாதிச்சிக்கிட்டு அது மூலமா காரியங்களை சாதிக்கிறவர் இவர்!

Boss-ங்கறவர் பயத்தை உண்டு பண்ணுவார்!

Leader-ங்கறவர் அன்பை பரவச் செய்வார்!

அதைச் செய்யலேன்னா “ஆடிட்”லே தகராறாயிடும்… இதைச் செய்ய லேன்னா”இன்கிரிமென்ட்” கட் ஆயிடும்… இப்படி ஏதாவது சொல்லி பயமுறுத்திக் கிட்டிருப்பார் அவர்.

இவர் அப்படி இல்லே... உடம்பு எப்படி இருக்கு... வீட்டுலே எல்லாரும் சௌக்கியமா இருக்காங்களா... ஆபிஸ்லே எல்லாம் வசதியா இருக்கா... நான் ஏதாவது உதவி செய்யணுமா... அப்படின்னு 'அன்பு'க்கு முக்கியத்துவம் குடுப்பார்!

Boss-ங்கறவர் எதுக்கெடுத்தாலும் 'நான்'– 'நான்'–னு சொல்லிக் கிட்டிருப்பார். Leader-ங்கறவர் 'நாம'– 'நாம'–ன்னு சொல்லிக்கிட்டிருப்பார்!

Boss-ங்கறவர் தப்புக்குக் காரணம் யார்–ன்னு பார்ப்பார்! Leader-ங்கறவர் தப்பு என்ன? –ன்னு பார்ப்பார்.

The Boss shows who is wrong! The Leader shows what is wrong?

இந்தக் காரியம் எப்படிச் செய்யப் பட்டிருக்கு–ன்னு தெரிஞ்சிக்கிறவர் Boss. இந்தக்காரியத்தை எப்படிச் செய்யணும்ன்னு செஞ்சிக் காட்டறவர் Leader.

Boss-ங்கறவர் பணியாளர்களைத் திட்டுவார் Leader-ங்கறவர் மரியாதைக் குரியவரா நடந்துக்குவார்.

செய்யற வேலையை ஒரு சுமையா நினைக்க வைக்கிறவர் Boss. செய்யற வேலையை ஒரு சந்தோஷமா ஆக்கறவர் Leader.

ஒரு முதலாளியா இருக்கிறவர் – அல்லது ஒரு நிர்வாகியா இருக்கிறவர் இது மாதிரியான நுணுக்கங்களைத் தெரிஞ்சி வச்சிக்கறது நல்லது.

ஒரு Boss இருந்தார். அவர் ஒரு நாள் ரொம்பப் பெருமையா... தன்னோட ஆபிசைப் பத்தி பேசிக்கிட்டிருந்தார். 'எனக்கு கீழே 200 பேர் வேலை செய்யறாங்க சார்! நான் ஒரு கோடு கிழிச்சா... அவங்க அதைத் தாண்டாத அளவுக்கு நான் நடந்துக்கிறேன் சார்'! அப்படின்னார் அவர்.

'அது' எப்படி முடியுது உங்களாலே?ன்னு கேட்டேன்.

"நான் கோடே கிழிக்கிறதில்லே சார்"! ன்னார்.

**நன்றி:**

'இன்று ஒரு தகவல்' என்ற நூலிலிருந்து

---

**கூட்டுறவு இதழுக்கு எழுத்தோவியங்களை அனுப்புவோர் அஞ்சல் / மின்னஞ்சல் மூலம் அனுப்ப வேண்டும். வெளியிடப்படாத எழுத்தோவியங்களைத் திரும்ப அனுப்ப இயலாது.**

**கூட்டுறவு இதழில் வெளிவரும் கட்டுரைகள், கவிதைகள், நாடகங்கள் மற்றும் துணுக்குகளில் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் எழுதுபவரின் கருத்தாகும். – ஆசிரியர்**

---

Printed at Central Cooperative Printing Works Limited, 83/95 Anna Salai, Chennai - 600 002 and Published on behalf of Tamilnadu Cooperative Union from 170, Periyar E.V.R. High Road, Kilpauk, Chennai - 600 010. Editor: K.G. Madhavan, Additional Registrar / Administrator, Tamilnadu Cooperative Union from 170, Periyar E.V.R. High Road, Kilpauk, Chennai-600 010.

Date of Publication : First Week of Every Month
Registered Newspaper in India No. 1103 / 57

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி லிட்.
TNSC BANK LTD.,
Chennai - 600001.

வங்கிச் சேவையில் 100 ஆண்டுகளைக் கடந்த வங்கி
நம்பிக்கை – நாணயம் – அதிக பாதுகாப்பு

1. மாதச் சம்பளம் பெறுவோர்க்கு சம்பளக் கடன் ரூ.7 இலட்சம் வரை வட்டி 11% p.a
2. அரசு ஊழியர் / ஆசிரியர்களுக்கு தனி நபர் கடன் ரூ.1 இலட்சம் வரை வட்டி 11% p.a
3. சிறு / குறு வியாபாரிகளுக்கு சிறு வணிகக்கடன் ரூ.50,000 வரை வட்டி 10% p.a
4. E.M.I. நகைக்கடன் ரூ. 2 இலட்சம் வரை வட்டி Flat 5% p.a
5. குறைந்த வட்டியில் விரைவான நகைக்கடன் ரூ.20 இலட்சம் வரை
6. குறைந்த வாடகையில் லாக்கர்கள் ரூ.999 முதல்


நகைக் கடன் கிராமுக்கு ரூ. 4000* வரை

- எந்தக் கிளையிலும் பரிவர்த்தனை செய்யும் வசதி
- RTGS / NEFT / IMPS
- Netbanking / Mobile Banking
- Billdesk Facilities

www.tnscbank.com contact@tnscbank.com
25302316 / 25302354

* Conditions Apply





C.C. BANK

# சென்னை மத்திய கூட்டுறவு வங்கி

நம்பகமான பாதுகாப்பு நிலையான வளர்ச்சி

(Since 1930)

215, பிரகாசம் சாலை, (பிராட்வே), சென்னை-600108.

தொலைபேசி எண் : 044-23458708 to 23458713 பேக்ஸ் :044-25381087

Web : www.ccbankchennai.com Email : ccb_bank@yahoo.co.in

சென்னை மாநகரில் 71 கிளைகள்




- மைய வங்கியியல் சேவையுடன் கூடிய கிளைகள்
- ATM மற்றும் SMS வசதி
- RTGS / NEFT பணப் பரிமாற்ற வசதி
- 54 கிளைகள் குளிர்சாதனம் மற்றும் நவீன வசதிகளுடன்
- சுமார் 10,000 வாடிக்கையாளர்களுக்கு நேரடி சமையல் எரிவாயு மானியம்
- ரூ.500 கோடிக்கும் அதிகமான முதலீடு
- வைப்பீடுகளுக்கு கூடுதல் வட்டி
- ஆயுள்/ பொதுக் காப்பீடு சேவைகள்

**அனைத்துத் தரப்பினருக்குமான கடனுதவிகள்**

- வீடு அடமானக் கடன்கள் / வீட்டுவசதி கடன்கள்
- நகைக் கடன்கள் (பல்வேறு வட்டி விகிதங்களில்)
- மாற்றுத்திறனாளிகளுக்கு வட்டியில்லா கடன்கள்
- சிறுவணிகக் கடன்
- சம்பளக் கடன்
- சுய உதவிக் குழுக்களுக்கான கடன்

(IFS Code: TNSC0010500)








**விவசாய விளைபொருட்கள் ஏல விற்பனை விபரம்**

| | | |
|---|---|---|
| திருச்செங்கோடு | பருத்தி, எள், நிலக்கடலை | செவ்வாய் |
| | தேங்காய் பருப்பு | வெள்ளி |
| | மஞ்சள் | சனி |
| கொங்கணாபுரம் | பருத்தி, எள் | சனி |
| | நிலக்கடலை | ஞாயிறு, திங்கள், புதன் |
| மல்லசமுத்திரம் | பருத்தி | புதன் |
| | நிலக்கடலை, மக்காச்சோளம் | திங்கள், வெள்ளி |
| | தேங்காய் பருப்பு | வெள்ளி |
| ஜலகண்டாபுரம் | தேங்காய் பருப்பு | செவ்வாய் |

**இதர சேவைகள்**

**சங்கத்தின் சொந்த தயாரிப்புகள்**




தலைமையகம் திருச்செங்கோடு : 04288 - 252359, 250511

கொங்கணாபுரம் கிளை : 04283 - 265540, 265652

மல்லசமுத்திரம் கிளை : 04288 - 238425 சேலம் சர்வோ : 0427 - 2352323

Email : tcmstcd@gmail.com

TCMS